©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 343] CHENNAI, THURSDAY, NOVEMBER 11, 2010
Aippasi 25, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர்.**

**தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அண்ணலக்ரஹாரம் கிராம ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 2938/2010/அ3.)*

**No. VI(2)/517(a)/2010.**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஜி. விஸ்வநாதன் என்பவர் அவ்வூராட்சியின் நிர்வாக அலுவலர் என்ற முறையில் செயல்படும்போது ஊராட்சியில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டு, அண்ணலக்ரஹாரம் ஊராட்சித் தலைவர் திரு. ஜி. விஸ்வநாதன் என்பவர் மீது 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205–ன்கீழ் விளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது.

அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு தனித்தனியே தனது விளக்கத்தினை அளித்திருந்தார். விளக்கங்கள் அலுவலக ஆவணங்கள் ஆகியன விதிமுறைகளுடன் ஆய்வு செய்யப்பட்டன. ஊராட்சி மன்றத் தலைவர் அளித்துள்ள விளக்கங்கள் ஏற்கக்கூடியதாக இல்லை. எனவே, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 205 (2)–ன்படி அண்ணலக்ரஹாரம் கிராம ஊராட்சித் தலைவர் திரு. ஜி. விஸ்வநாதன் என்பவரின் நிர்வாகத்தில் காணப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக அவரை அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டு, அது குறித்து அந்த கிராம ஊராட்சியின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக அண்ணலக்ரஹாரம் கிராம ஊராட்சி உறுப்பினர்களின் கூட்டத்தினை அவ்வூராட்சி மன்ற அலுவலகத்தில் நடத்திட கும்பகோணம் வட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்டது.

அதன்படி கும்பகோணம் வட்டாட்சியர் அண்ணலக்ரஹாரம் ஊராட்சியின் கூட்டத்தை 06–08–2010 அன்று காலை 11.00 மணிக்கு அவ்வூராட்சி மன்ற அலுவலகத்தில் கூட்டியுள்ளார். கூட்டத்தில் அண்ணலக்ரஹாரம் ஊராட்சியின் 9 உறுப்பினர்களும், ஊராட்சி மன்றத் தலைவரும் கலந்துகொண்டுள்ளனர். கூட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு அன்னார் அளித்துள்ள விளக்கங்கள், ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்களின் யோசனை ஆகியவற்றை முன்வைக்கப்பட்டு உறுப்பினர்களின் கருத்து கேட்கப்பட்டுள்ளது. அதில் குற்றச்சாட்டு 3–ற்கான விளக்கத்தினை 1–வது வார்டு உறுப்பினர் திரு. கே. ராமச்சந்திரன்

மற்றும் 3–வது வார்டு உறுப்பினர் திருமதி டி. கோவிந்தம்மாள் ஆகிய இரு உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. மற்ற அனைத்து உறுப்பினர்களும் ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கத்தினை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்திருந்தனர். மேலும் மற்ற அனைத்து குற்றச்சாட்டுக்களுக்கான ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கத்தை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வதாக கருத்து தெரிவித்திருந்தனர்.

ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் ஆய்வாளரின் யோசனையினை 1–வது வார்டு உறுப்பினர் திரு. கே. ராமச்சந்திரன் மற்றும் 3–வது வார்டு உறுப்பினர் திருமதி டி. கோவிந்தம்மாள் ஆகிய இரு உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர். மற்ற உறுப்பினர்கள் நிராகரித்திருந்தனர்.

குற்றச்சாட்டுகள், அவற்றிற்கான ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கங்கள் மற்றும் அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்து ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. ஊராட்சியின் செயல் அலுவலராகிய ஊராட்சி மன்றத் தலைவர் தனது கட்டாய மற்றும் அடிப்படை கடமைகளிலிருந்து தவறி அரசினால் ஊராட்சி வளர்ச்சிக்கு வழங்கப்படும் நிதிகளில் முறைகேடுகள் செய்தும் அரசு விதிமுறைகளை மீறி முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளது உறுதியானதால் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்து ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் 19–08–2009 தேதிய சென்னை உயர்நீதிமன்ற முழு நடுவர் ஆயத்தின் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி, அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்றத்தின் கருத்துக்களுக்கு மாறாக, ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யவேண்டிய அவசியத்தின் காரணங்களை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஜி. விஸ்வநாதன் என்பவருக்கு தெரிவித்து மறு விளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டு அன்னார் அதற்கு தனது மறு விளக்கத்தினை சமர்ப்பித்திருந்தார்.

அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்றத் தலைவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, அவர் அளித்த விளக்கங்கள், ஊராட்சி மன்றத்தின் கருத்து, ஆய்வாளரின் முடிவு ஊராட்சி மன்றத்தின் கருத்துகளுக்கு மாறுபடுவதால் ஊராட்சி மன்றத் தலைவருக்கு வழங்கப்பட்ட மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு மற்றும் அதற்கு அன்னார் அளித்த மறுவிளக்கம் ஆகியவை உளத்தேர்வின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஜி. விஸ்வநாதன் என்பவரை அவ்வூராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்வாணை குறித்த அறிவிக்கை 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262(1)–ன்படியும், சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மைச் செயலர் அவர்களின் கடித ந.க. எண் 3205/ப.ரா.4/2010–1, நாள்: 01–03–2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூர்,
2010 நவம்பர் 9.

**ம.சு. சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.